நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாற**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC. 298 /2021**

வழக்கு சாட்சி- **அ.சா.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | : | ஜாதி | |
| தந்தை /கணவர் பெயர் | கலியமூர்த்தி | : | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | அடஞ்சூர் | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 30 /2024 |

( எதிரி ஆஜர் )

**நாள் : 08.02.2024**

**முதல் விசாரணை:**

**1)** நான் அடஞ்சூரில் குடியிருந்து ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.. அ.சா.1 எனது அக்கா ஆவார். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சின்னதுரை என்பவர் எனது மாமா ஆவார். கடந்த 19.01.2020 ஆம் தேதியன்று மாலை 04.00 மணி அளவில் எனது அக்கா, மாமா, அவர்களது மகன் மூவரும் இரு சக்கர வாகனத்தில் அடஞ்சூர் வந்துவிட்டு அவர்கள் ஊருக்கு சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி மற்ற 2 நபர்களுடன் இரு சக்கர வாகனத்தில் வந்து புள்ளவாய்க்கால் அருகே அ.சா.1 சென்று கொண்டிருந்த வண்டிமீது மோதியதில் மூவரும் கீழே விழுந்துவிட்டார்கள். அ.சா.1 ன் மகனுக்கு முன்தலையிலும், கையிலும் அடிபட்டிருந்தது. மாமாவிற்கு பிறப்பு உறுப்பில் அடிபட்டிருந்தது. திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றோம். மருத்துவர் பரிசோதித்துவிட்டு அவர் இறந்தவிட்டதாக சொன்னார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

1) அ.சா.1 மற்றும் அவரது மகன், அவரது கணவர் ஆகியோர் அடஞ்சூர் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டு அவர்கள் ஊருக்கு சென்று திரும்பி சென்றபோதுதான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது அக்கா அ.சா.1 அவரது கணவர் மற்றும் அவரது மகன் ஆகியோர் மூன்று பேரும் அவரது இரு சக்கர வாகனத்தில் சென்றார்கள். அந்த வாகன எண் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த புள்ளவாய்க்காலுக்கும், எங்கள் ஊரான அடஞ்சூருக்கும் சுமார் 4 கி.மீ. தூரம் இருக்கும். விபத்து நடந்ததை கேள்விபட்டுதான் சம்பவ இடம் சென்றேன். நான் சென்றபோது ஆம்புலன்சில் ஏற்றி கொண்டிருந்தார்கள்.

2) அ.சா.1 அவரது கணவர் மற்றும் மகன் சென்ற இரு சக்கர வாகனத்தில் கரும்பு கட்டு கொண்டு சென்றார்கள் என்றால் சரிதான். அந்த கரும்பு கட்டு எதிரே வந்த வாகனத்தின்மீது இடித்துதான் விபத்து ஏற்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலிசார் சொல்லி கொடுத்ததன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

மறு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)